**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-08032024-7081

Volume: 8

Issue: 3

Month: January

Year: 2024

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 16.10.2023

Accepted: 11.12.2023

Published: 01.01.2024

Citation:
Anantharajan, G. "Status of Women in the Songs of Sangam Feminist Poets." *Shanlax International Journal of Tamil Research,* vol. 8, no. 3, 2024, pp. 21–28.

DOI:
https://doi.org/10.34293/tamil.v8i3.7081

*Corresponding Author:
madhunisha432015@gmail.com

CC BY SA

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Status of Women in the Songs of Sangam Feminist Poets

**G. Anantharajan**
*Ph.D Research Scholar, Tamil Research Centre*
*The American College, Madurai, Tamil Nadu, India*
*https://orcid.org/0000-0001-5960-4640*

**Abstract**
It is known through the Sangam literature that people divided their lives into internal and external during the Sangam period. It is necessary to know the status of women in this kind of life. It can be explained that women did not cross the sea in earlier times. At the same time, it is also worth noting that the women poets of the Sangam period were able to speak and appeal to the king with right. In this way, this review aims to describe the status of women during the Sangam period.

**Key Words:** Sangam Period, Women Poets, Status of Women, Sangam Literature

**References**

1. Na. Murugesapandian, Sangap pen kavignargalinkavithaigal, P.8
2. Natrinai, P. 121
3. Kurunthogai, P. 31
4. Ibid, P. 147
5. Ibid, P.273
6. Ibid, P.149
7. Ibid, P.28
8. P.S.Mani, Sangakaalaouvaiyarumulagappenparpulavargalum, P.278
9. Akananoor, P. 135
10. Ibid, P.294
11. Kurundogai, P. 68
12. Ibid, P.217
13. Agananur P. 11
14. Kurundogai, P. 126
15. Naritaina P. 295
16. Kurundogai, P. 67
17. Naritainai, P. 187
18. Kurundogai, P. 157
19. Ibid, P.48

# சங்ககாலப் பெண்பாற் புலவர்களின் பாடல்களில் பெண்களின் நிலை

*க. ஆனந்தராஜன்*
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ் உயராய்வு மையம்
அமெரிக்கன் கல்லூரி, மதுரை

***ஆய்வுச் சுருக்கம்***
*சங்க கால மக்களின் வாழ்வியலை அகம், புறமெனப் பகுப்பது வழக்கினில் உள்ளது. சங்க வாழ்வியலில் பெண்களின் நிலையானது எத்தகையிலானதாக அமைந்துள்ளதென அறிய வேண்டியது அவசியமானது. முந்தைய காலத்தில் பெண்கள் கடல் தாண்டிச் செல்லுதல் இல்லையென விளங்க முடிகிறது. அதேவேளையில், சங்க காலத்தியப் பெண்பாற் புலவர்கள் மன்னரிடத்தில் உரிமையோடு பேசவும் எதிர்த்து முறையிடக் கூடியவர்களாகவும் இருந்துள்ளனர் என்பதும் கவனிக்கத்தக்கதாகும். சங்க காலத்துப் பெண்களின் நிலையை விவரிப்பதாகவே இவ்வாய்வு அமைகிறது.*
***முக்கியச் சொற்கள்:*** *சங்க காலம், பெண்பாற் புலவர்கள், பெண்களின் நிலை, திறனாய்வு*

## தொடக்கவுரை

சங்க இலக்கியம் தோன்றிய காலம் தமிழ் இலக்கிய வரலாற்றின் தோற்றுவாயாகும். இக்காலத்திற்கு முன்பேகூட தமிழில் இலக்கியங்கள் தோன்றியிருக்க வாய்ப்பிருக்கிறது. இப்பாடல்களை ஆண் பெண் என இருபாற் புலவர்களும் இயற்றியுள்ளார். சங்கப் பெண்பாற் புலவர்களின் பாடல் கருத்துக்களின் வழியாக அக்காலத்தில் வாழ்ந்த பெண்களின் நிலையை விளக்குகிறது.

தமிழில் பெண்கள் இலக்கியவாதியாக விளங்குவதைப் பழந்தமிழ்ச் சங்க இலக்கியச் சான்றுகளிலிருந்து துவங்க வேண்டியுள்ளது. சங்க இலக்கியங்கள் எனப்படுகின்ற எட்டுத் தொகை, பத்துப்பாட்டு இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள பாடல்களில் ஏறக்குறைய நானூற்றி அறுப்பத்தாறு பாடல்கள் பெண் கவிஞர்களால் இயற்றப்பட்டுள்ளன. அகப்பாடல்கள், புறப்பாடல்கள் என முறையே காதலையும் வீரத்தையும் அடிப்படையாகக் கொண்டுப் பாடப்பெற்ற அப்பாடல்களில் தமிழர் சமூகப் பண்பாட்டு நிகழ்வுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அன்றைய இலக்கிய இலக்கண முறைக்கேற்பப் பெண் கவிஞர்கள் பாடல்களை இயற்றியிருப்பினும் அவற்றுள் ஆணைச் சார்ந்த பெண்களின் வாழ்க்கை நிலை வெளிப்படுத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. சங்க காலக் கவிஞர்கள் மொத்தம் 473 பேரில் பெண் கவிஞர்கள் மட்டும் 41 பேர் எனக் கண்டறியப்பட்டுள்ளனர். பெண் கவிஞர் குறித்த எண்ணிக்கையைக் கூறுவதில் தமிழ் அறிஞர்களிடையே வேறுபாடு உள்ளது, என்றும் “சங்ககாலத்தில் நூற்றுக்கணக்கான பெண் கவிஞர்கள் கவிதை எழுதியிருக்கிற வாய்ப்புண்டு. அவற்றில் தொகுப்பாளரின் மனத்தடை, கட்டுப்பாட்டு நோக்கம் காரணமாகப் பல கவிஞர்களின் கவிதைகள் தொகுப்படாமல் இருக்கச் சாத்தியமுண்டு”[1] என்றும் விளக்குவர். மிகக் குறைந்த எண்ணிக்கையில் பாடல்கள் கிடைத்திருப்பினும் அப்பாடல்களை இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே தமிழுக்குத் தந்த சங்ககாலத்துப் பெண்பாற் புலவர்கள்

அக்காலப் பெண்களின் எழுத்து அறிவினையும் புலமையையும் அவர்களுக்கிருந்த சமூக மதிப்பையும் எடுத்துக் காட்டுகிற சான்றுகளாகத் திகழ்கின்றனர்.

சங்ககாலப் பெண் புலவர்கள் பல தரப்பட்டவர்களாகக் காணப்படுகின்றனர். இவர்கள் பல்வேறு வாழ்ந்தவர்களாகத் தோன்றுகின்றனர். சாதாரணக் குடிமகள் என்ற நிலையிலிருந்து அரசனின் மனைவி என்ற நிலைவரை பல்வேறு சமூக பொருளாதாரத் தொழில் புரிந்த பெண்கள் பாடல்களைப் புனைந்துள்ளனர். இவர்களது பாடல்களின் வடிவம் உள்ளடக்கம் ஆகியன ஆண் புலவர்களுக்கும் மேலான கவித்துவம் பெற்றிருப்பதைக் காண முடிகிறது. இத்தகைய பெண்களின் புலமையால் சங்க காலத்தில் பெண்களுக்குக் கல்வி மறுக்கப்படவில்லை என்பதை அறியலாம். மேலும் இவர்கள் உயர்குலப் பெண்களாக மட்டுமே இருந்தவர்கள் எனக் கூறவும் இயலாது. ஆண்களுக்கு நிகராகப் பெண் புலவர்களும் அரசவையில் இடம்பெறக் கூடிய தகுதியைப் பெற்றிருப்பதையும் உணரலாம்.

### பெண்பாற் புலவர் தம் பாடல்களும் பாடுபொருளும்

பெண்பாற் புலவர்கள் அகம், புறம் என இருவகைப்பட்ட அடிக் கருத்துக்களில் பாடல்களைப் பாடியுள்ளனர். அகம் குறித்துப்பாடிய பாடல்களில் அவர்கள் பெண்களின் காதல் துயரங்களையே மிகுதியாகப் பதிவு செய்துள்ளனர். காதலனைப் பிரிந்த துயரத்தால் வருந்துதல், தலைவன் அருகில் இருந்தால் இன்பம் என்றும் அவன் பிரிந்தால் துயரம் என்றும் கூறுதல், ஊருக்கு அஞ்சித் தம் காதலை வெளித்தெரியாது கட்டுப்படுத்தும்போது ஏற்படும் வருத்தங்களைத் தெரிவித்தல், பனி, வாடை, மழை போன்ற இயற்கையால் ஏற்படும் உடல் துன்பங்களையும், காம உணர்வுகளையும் நாணத்தை விட்டொழிக்கும் வண்ணம் வேதனையுடன் கூறுதல் தம்மைப் பிரிந்திருந்த காலத்தில் தலைவன் தம்மை எண்ணிப் பார்ப்பானா? மாட்டானா? என ஏங்கி வருந்துதல், பரத்தையிடம் உறவு வைத்துக்கொள்ளாத கணவனாகத் தலைவன் இருக்க வேண்டுமென எண்ணுதல் எனப் பல நிலைகளில் அகப்பாடல் தலைவியரின் துயரங்கள் அமையுமாறு புலவர்கள் பாடியுள்ளனர்.

### தலைவனின் பிரிவும் தலைவியின் துயரமும்

பெண்பாற் புலவர்கள் இயற்றிய காதல் பாடல்களில் பெண்களுக்கு அல்லது தலைவியருக்கு ஏற்படுகிற வருத்தங்களையும் விருப்பங்களையும் அவர்கள் தலைவனும் இருக்கிற, இல்லாதிருக்கிற எதிர்வுகளிலேயே கூறிச் செல்வதை மிகுதியாகக் காண முடிகிறது. தலைவன் பிரிந்திருப்பது அல்லது வராதிருப்பது, தடுத்தும் விடாது பிரிந்து செல்வது, ஏமாற்றிச் செல்வது, பிரிந்திருந்த காலம் நீடித்தமையால் தலைவனைத் தேடி அலைவது எனப்பலவாறு அமையும் தலைவனின் பிரிவினால் உண்டாகும் தலைவியரின் துயரங்கள் பெரும்பாலான பாடல்களில் குறிக்கப்பட்டுள்ளன. சான்றாக, காதலன் தன்னைப் பிரிந்த நிலையில் இல்லத்தில் தனிமையாய் இருந்த போது இடி முழக்கம் அதிரக்கேட்டு உள்ளம் நடுங்கியதைத் தலைவி பின்வருமாறு குறிப்பிடுகிறாள்.

> ***"பெருநகை கேளாய், தோழி! காதலர்***
> ***ஒருநாள் கழியினும் உயர் வேறுபாடு உம்***
> ***பொம்மல்; ஓதி! நம் இவண் ஒழியச்***
> ***செல்ப என்ப, தாமே: சென்று,***
> ***தம் வினை முற்றி வரு உம் வரை, நம் மனை***
> ***வாழ்தும் என்ப, நாமே, அதன் தலை***
> ***கேழ்கிளர் உத்தி அரவுத்தலை பனிப்ப,***
> ***படுமழை உருமின் உரற்றுகுரல்***
> ***நடுநாள் யாமத்தும் தமியம் கேட்டே"[2]***
>
> ***(நற்றிணை, பா: 129)***

ஔவையின் பாடலில் தலைவன் தன்னைவிட்டுப் பிரிந்தால் தான் இறந்து விடுவதாகத் தலைவி கூறுகிறாள். பெண் தனியாக இருப்பது அச்சத்தைக் குறிக்கிறது. தலைவன் அருகிருக்க வேண்டும் என்று தலைவி எண்ணுவதால் ஆணைச் சார்ந்த பெண்ணின் மனப்பாங்கு இங்கு வெளிப்படுத்தப்படுகிறது.

குறுந்தொகைப் பாடல் ஒன்றில் வில்லோர் விழா, துணங்கைக் கூத்து என விழாக்களும், கூத்துக்களும் நடைபெறும் இடங்களுச் சென்றிடும் தலைவனைத் தலைவி அந்த இடங்களுச் சென்று தேடுவதால் தானும் ஆடுகள மகள் ஆனதாகக் கூறி வருத்தப்படுகிறாள்.(3) அகநானுற்றுப் பாடல் ஒன்றில் தன்னைப் பிரிந்து சென்ற கணவனைத் தேடிச் செல்லும் பெண் ஒருத்தி, அவளது கணவனைப் புலிகள் அச்சுறுத்தும் காட்டு வழியே தேடிச் சென்றதைப் போலத் தானும் தண் கணவனைத் தேடப் போவாதக் குறிப்பிடுகிறாள். இத்தகையப் பாடல் கருத்துக்களால் கணவன்மாரைத் தேடிச்சென்று இல்லத்திற்கு அழைத்து வருகிற மனைவியர் அல்லது பெண்களின் செயல் பன்னெடுங் காலமாகத் தொடர்வதை அறியலாம்.

இக்கருத்தினை விளங்கும் சான்றுப் பாடல் வருமாறு:

**‘நெறிபடு கவலை நிரம்பா நீளிடை**
**வெள்ளி வீதியைப் போல**
**நன்றும் செலவு அயர்ந்திசினால் யானே**
**பல புலந்து,**
**உண்ணா உயக்கமொரு உயில் செலச்**
**சாஅய்,**
**தோளும் தொல்கவின் தொலைய**
**நாளும் பிரிந்தோர் பெயர்வுக்கு இரங்கி,**
**மருந்து பிறிது இன்மையின் இருந்து**
**வினை இலனே’’[4]**

இப்பாடலில் இடம்பெறும் தலைவி, தலைவன் துணை இல்லை எனில் தனக்கு மருந்து பிறிதில்லை என்று வருந்திக் கூறுவதிலிருந்து அக்காலச் சமூகத்து ஆடவர் நடவடிக்கையையும் அவர்களைத் தேடி அலைந்த பெண்கள் செயலையும் ஆடவரை முன்னிலைப்படுத்தியிருந்த சமூகச் சூழலையும் அறியலாம். குடும்ப எல்லைக்குள் பெண்கள் வாழும்படியான நெறி வகுத்த சமூகம் அவர்கள் கணவன்மார் பொறுப் பற்றவர்களாக குடும்ப நெறிமுறைகளிலிருந்து விலகி வெளியில் மனம்போன இடங்களுக்குச் சுற்றித் திரிவதற்கு வாய்ப்பளித்திருப்பது குறிப்பிடத்தக்கது. மேலும் பெண்களின் மன இயல்பை அறிந்துகொள்ள இயலாத ஆடவரின் நடத்தையையும் இக்காலப் பெண்பாற் புலவர்கள் குறிப்பிடுகின்றனர்.

எடுத்துக்காட்டாக அகநானுற்றுத் தலைவி,

**“நம் மனத்து அன்னமென்மை இன்மையின்**
**நம்முடை உலகம் உள்ளார் கொல்லோ’’[5]**

என்பதால் ஆடவருக்குப் பெண் மனத்தைப் போல மென்மைப் பண்பு இல்லை என்பதாலோ பிரிந்த காதலர் நம் உள்ளத்து இயல்பை எண்ண மறந்தனர்? எனக் கூறி வேதனைப்படுகிறார்.

## ஆற்றொணாத் துயரம்

களவுக் காலத்திலும் திருமணம் முடித்த பின்பும் தலைவன் பிரிந்த நிலையில் பெண் தன்னைக் கட்டுப்படுத்தி ஆற்றியிருக்க வேண்டுமெனச் சமூகம் பெண்ணை வற்புறுத்தும் விதிமுறையைப் பொறுக்காத பெண்பாற் புலவர்கள் தமது பாடல்களில் மிகவும் நுணுகி ஆராயத்தக்க வகையில் அவ்விதிகளைக் கேள்வி கேட்கும்வண்ணம் பெண் உணர்வுகளைப் பதிவு செய்துள்ளனர். சான்றாக, பின்வரும் குறுந்தொகைப் பாடலில் காதல் தலைவி தனது நாணத்தை விட்டொழிக்கும் அளவிற்குத் தாங்க வொண்ணாத காம உணர்வை வெளிப்படுத்துகிறாள்.

**"அரிதோ தானே நாணே நம்மொரு**
**நணிநீடு உழந்தென்று மன்னே இனியே**
**வான்பூங் கரும்பின் ஓங்குமணற் சிறுபறை**
**தீம்புனல் நெரிதா வீந்து, உக்கா அங்கு,**
**தாங்கும் அளவைத் தாங்கி,**
**காமம் நெரிதரக் கைந்நில் லாதோ"[6]**

இப்பாடல் தலைவி, தன்னால் தாங்க முடிந்தஅளவுதான் காம உணர்வை தாங்க இயலும் அதற்குமேல் அது என் கட்டுப்பாட்டில் இல்லாமல் போய்விடுமே என வருந்தி, இச்சமூகம் பெண்ணுக்கு வகுத்த கற்பு என்னும் வரையறையைச் சாடுகிறாள். இதேபோல் காமநோயினால் துன்புற்ற பெண்ணொருத்தி வாய்விட்டுக் கேள்வி கேட்பது அதிர்ச்சியைத் தருவதாக உள்ளது.

**அப்பாடல் வருமாறு**

**"மூட்டுவேன் சொல்? தாக்குவேன் கொல்**
**ஓரேன் யானும் ஓர் பெற்றி மேலிட்டு,**
**ஆ அ ஒல் எனக் கூவுவேன் கொல்?**
**அலமரல் அசைவளி அலைப்ப, என்**
**உயவு நோய் அறியாது, துஞ்சும் ஊர்க்கே.''[7]**

இப்பாடலில் ஊர் எனக் குறிக்கப்படுவது ஒட்டுமொத்தச் சமூகத்தையாகும். பெண் அவளுக்கேற்படும் காதல் உணர்வை வெளிப்படுத்தலாகாது என்று வரையறை செய்யும் சமூகத்தில் தனக்கு ஏற்படும் காதல் நோயை எங்ஙனம் வெளிப்படுத்துவாள்? முட்டிக் கொள்வாளா? கத்துவாளா? அவள் எப்படித் துயரத்தைத் தீர்த்துக் கொள்வாள்? இவை போன்ற கேள்விகளுடன் காதல் வலியினைக் கட்டுப்படுத்தும் வழி அறியாது புலம்பும் பெண்ணின் உளவியலை ஔவையார் காட்டுகிறார். பிற நாட்டுப் பெண் கவிஞர்களோடு ஔவையாரை ஒப்பிட்டுப் பேசும் அறிஞர் வீரம், காதல் இரண்டின் எல்லைகளைத் தொட்டுக் காட்டியும் சங்கத் தமிழ் இலக்கிய மரபிற்கு புதிய நன்கொடையையும் அளித்தவர் ஔவை''[8] என்கிறார்

**இயற்கையால் வரும் துயரம்**

தலைவன் அருகில் இல்லாமல் தனிமையில் துன்பப்படும் தலைவியற்குப் பணி, வாடைக் காற்று, மழை போன்ற இயற்கைச் சூழலும் காம விருப்பத்தினைத் தூண்டும் காரணிகளாக அமைவதுண்டு. அவற்றைப் பொறுக்காது தலைவியர் வருந்துவதான பாடல்களும் பெண்பாற் புலவர்களால் இயற்றப்பட்டுள்ளன. சான்றாக,

**"பனிகடி கொண்ட பண்புஇல் வாடை''[9]**

**"ஆனாது ஏறிதரும் வாடையொடு**
**நோகென் தோழி! என் தனிமையானே''[10]**

என்றும் வாடைத் துன்பத்தையும் அத்துன்பம் போக்கும் மருந்து தலைவனின் மார்பு என்று கூறுகின்றனர். மேலும்,

**"இணர் இறுபு உடையும் நெஞ்சமொடு**
**புணர்வு வேட்டு எயிறு தீப்பிறப்பத்**
**திருகி, நடுங்குவதும் - பிரியன் யாம்**
**கடும்பினி உழந்தே''[12]**

எனத் தலைவனின் பிரிவு ஆற்றாமையொரு பனிவாடையும் சேர்ந்து வாட்டுவதால் புணர்வு வேட்கையில் நெஞ்சம் கலவரப் பட்டிருப்பதைத் தலைவி கூறுகிறாள். இங்ஙனம் புணர்வு வேண்டிப் பெண் உரைப்பது போன்று அமைந்த பாடல்கள் பெண்களது அக உணர்வினை அல்லது கோரிக்கையை நிலை நாட்டுவதற்காகப் புனையப்பட்டவை எனலாம். இதே போன்று பிறிதொரு அகநானூற்றில் பாடல் ஒன்றில் இடம்பெறும் தலைவி, தலைவன் தன்னைப் பிரியாதிருக்க வேண்டும். என்றும் ஒருவேளை அவன் பிரிந்து செல்ல முற்படின் தன்னையும் உடன் அழைத்துச் செல்வது நலம் பயக்கும் என்றும் கூறுகிறாள். அவனுடன் செல்வதால் மனத்தாலும்உடலாலும்ஒருவருக்கொருவர் உறவாடி மகிழவும் இடம் உண்டு எனக் கூறுகிறாள்.

இக்கருத்தினை விளக்கும் பாடல் வருமாறு:

**“........பொங்கு மணற்கான் யாற்றுப்
படுசினை தாழ்ந்தபயில் இணர்எக்கர்
மெய்புகுவு அன்னகைகவர் முயக்கம்
அவரும் பெருகுவர் மன்னே”**[13]

இப்பாடலில் பெண்ணையும் ஆடவன் உடன் அழைத்துச் செல்ல வேண்டும் என்ற விருப்பத்தின் அடிப்படையில் புலவர் கூறும் செய்தி பெண் சார்பாக ஒட்டு மொத்தச் சமூகத்திற்குக் கூறும் செய்தியாக உள்ளது.

### இளமை அழிவது கண்டு துயரம்

பெண் ஒருத்தி ஆடவனுடன் மகிழ்ந்து வாழவேண்டிய இளமைக்காலத்தில் தனது தலைவன் பிரிந்து சென்றதால் தனது இளமை போகிறதே என வேதனைப்பட்டுப் புலம்புவதைப் பின்வரும் பாடலில் காண முடிகிறது.

**“இளமை பாரார் வனம் நசைஇச் சென்றோர்
இவணம் வாரார் எவணரோ? என
பெயல் புறந் தந்த பூங்கொடி முல்லைத்
தொகுமுகை இலங்கு எயிறு ஆக
நகுமே தோழி! நறுந்தண் காரே”**[14]

என்ற பாடல், தலைவன் குறித்த பருவத்தில் வரவில்லை. அதனால் முல்லை சிரித்துக் கேலி செய்வது போன்றுள்ளது என்று தலைவி தலைவனுக்காகக் காத்திருந்த வேதனையைக் கூறுகிறது. ஊர் சிரிக்கும் என்பதுமே முல்லை நகும் எனக் கூறப்பட்டுள்ளது. பலகாலம் எதிர்பார்த்துக் காத்திருந்த தன்னிடம் ஊரார், உனது தலைவன் வரவில்லையா? எனக் கேலி செய்வர். தலைவன் தந்த ஏமாற்றத்திலும் பிறரின் கேளிக்கைச் சொல் மிகுந்த வேதனை தருவதாகும். இளம்பருவப் பெண்ணைக் காதலன் விடுத்துப் பிரிந்தால் அவன் தன் உள்ளத்தால்,உடலால் குன்றிப் போகிறாள். குடும்ப நெறியில் ஒரு ஆடவன் பெண்ணின் அழகை, இளமையை நிராகரித்தல் என்பது அவளை உயிருள்ள பொருளாகக் கருதாத அவனது செருக்கைக் காட்டுவதாகும்.

பிறிதொரு நற்றிணைப் பாடலில்,

**“கலிமடைக் கள்ளின் சாடி அன்னஎம்
இளநலம் இற்கடை ஒழியச்
சேறும் வாழியோ! முதிர்கம் யாமே”**[15]

எனத் தலைவி, வீசி எறியப்பட்ட மதுச் சாடியைப் போல வீட்டு வாசலிலேயே கிடந்து இளமை அழிவதையும் வீட்டிலிருந்த படியே முதுமையடைந்து மடிந்து போவதையும் எண்ணி வருந்துகிறாள். வீடே சிறையாக இருப்பதை எண்ணியும் வருந்திப்பாடுகிற பெண்கள் உண்டு. எடுத்துக்காட்டாக, தலைவியின் காதல் வெளிப்பட்டுவிட்டது. வீட்டார் அறிந்து காவல் செய்கின்றனர். காதலன் வெகு காலமாகியும் வரவில்லை. வீட்டிலோ பாதுகாப்பு மிக அதிகம். சமூகமும் தனக்கு உறுதுணையாக இருக்காது. சுயமாய் முடிவெடுக்க இயலாத நிலையில் சிறையில் வாழ்வதுபோல வீட்டில் இருந்து கொண்டு தனது இளமை காதலனைப் பற்றிய நினைவிலேயே கழியுமோ? என வருந்திப் பாடுகிறாள்.

**பாலைவழி பிரிந்து செல்கிற நம் காதலர் நம்மை நினைப்பாரோ? என ஏங்கித் தவிக்கும் பெண்களின் மனநிலையும் பெண்பாற் புலவர் இயற்றிய பாடல்களில் குறிக்கப்பட்டுள்ளன.**[16]

தனது மார்பில் கிடந்து மயங்கி மகிழ்ந்த காதலர் அவ்இனிமையைத் துறந்து துயர் தருகின்ற பாலைவழியாக நடந்து செல்கிறாரே! **“முலையிடை முனிநர் சென்ற ஆறே”** என வருந்தும் குறுந்தொகை தலைவியும் காட்டப்படுகிறாள். மேற்கூறியவற்றால் பெண் கவிஞர்கள் தலைவியை விடுத்துத் தலைவன்! கணவன் பிரிந்து செல்கிற காட்சியில் அல்லது உணர்வில் அமைக்க அகப்பாடல்களை மிகுதியாகப் படைத்திருக்கக் காணலாம்.

**தலைவன் இருப்பும் மகிழ்வும்**

பெண்பாற் புலவர்கள் எழுதிய அகப்பாடல்களில் தலைவியின் அருகில் தலைவன் இருக்கும் சூழலை இனிமையெனப் படைத்துக் காட்டியுள்ளனர். தலைவன் தலைவியின் அருகிலிருந்து அவளது அழகை இரசிக்கவும் அவளுடன் விளையாடி மகிழவும் புணர்ந்து கிடக்கவும் அவளைப் பிரியாது இருக்கவும் வேண்டுமென விரும்புகிற தலைவியரின் மனவெளிப்பாடுகள் இப்பாடல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஊஞ்சலாடி மகிழ எண்ணுகிற தலைவி தனது தோழியர் கூட்டம் ஊஞ்சலை ஆட்டாது தான் விரும்பிய காதலன் வந்து ஊஞ்சலை ஆட்டுவித்தால் பெரிது மகிழ்வடைதாகக் கூறுகிறாள். தலைவன் அருகிலிருந்து அன்பு செய்வதை விரும்பும் பெண்ணின் மனநிலை நற்றிணையின் தொண்ணூறாவது பாடலில் வெளிப்படுகிறது[17] பிறிதொரு நற்றிணைப் பாடலில் தலைவி, தலைவன் தன்னைப் பிரிந்திருந்த நிலையில் அவனோடு முன்பு இருந்து இனிமையாய் விளையாடிக் கழித்த கடற்கரைச் சோலையைப் பார்த்து இரங்குகிறாள். தலைவனோடு கூடியிருக்கிற இரவுப் பொழுதையே தலைவி வேண்டுவதால் “கோழி கூவுகிறதே” விடிந்துவிடுமே என மனம் கலங்குகிறாள். “தலைவனோடு கூடியிருக்கிறபொழுது புலர்வது தலைவிக்கு வருத்தமளிக்கிறது. காதலர் பார்வையிட்டு நீங்குகிற நேரம் வந்ததே[18] என அவள் வருந்திப் பாடுகிறாள். புணலாடும் தலைவன் மார்பைப் பிறமகளின் விரும்பித் தழுவாதபடி காத்தக் கொள்ளும் தலைவியின் மார்பையே தலைவி தனக்குரியதாக வேண்டுகிறாள். இதனால் ஒருவனுடன் வாழ வேண்டிய கற்பும் அவனைக் காத்துக்கொள்ள வேண்டிய பொறுப்பும் பெண்ணுக்கு விதிக்கப்படுகிறது எனலாம்.

இப்பாடலால் ஆணின் உடல் முக்கியத்துவம் பெறுகிறது. கூடவே அது களங்கப்படாது. இருக்கப் பெண் காவலாக இருக்க வேண்டியுள்ளது. இங்கு ஆணின் கற்பிற்கும் பெண்ணே பொறுப்பாகிறாள். மேலும் ஆணின் உடல் பாலியல் வரன்முறையற்ற பல பெண்கள் துய்ப்பதற்கான இடமாக உருவாக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இது ஆண் உடலை முன்னிலைப்படுத்துகிற செயலன்றி வேறில்லை.

**இனியனும் இனிய சொல்லும்**

காதல் வயப்பட்ட தலைவிக்கு அவள் எண்ணியபடி காதலன் நடந்து கொள்ளாவிட்டால் அவளுக்கு ஏற்படும் மகிழ்வைச் சொல்லிமாளாது. தலைவி, காதலன் தனக்கு ஏற்பட்ட காதல் நோய் நீங்க, “உன்னைத் திருமணம் முடித்துக் கொள்வேன்” என்று இனிய சொல்லைத் தலைவன் சொல்லமாட்டானோ? என ஏங்கிப் பாடுகிறாள்.

> **நன்னுதல் பசலை நீங்க, அன்ன**
> **நசை ஆகு பண்பின் ஒரு சொல்**
> **இசையாது கொல்லோ, காதலர் தமக்கே[18]**

என்ற இப்பாடலால் ஆடவனின் வாய்க் கூற்றிலேயே ஒரு பெண்ணின் வாழ்வும், வாழ்வின் பயனும் அடங்கியிருப்பதாகக் கூறுவதை எண்ணிப் பார்க்கலாம். அடக்கப்பட்ட வாழ்வைப் பெண்ணே உடன்பட்டு வேண்டுவது போல் கவிதை புனைந்திருப்பது அதனினும் வேடிக்கை. மேலும் திருமணம் முடிந்தபின் தலைவியை நீங்காத பண்பினாகத் தலைவன் இருக்க வேண்டும் என்றே ஒவ்வொரு தலைவியும் விரும்பியிருக்கிறாள். தனக்குக் கணவனாக வாய்க்கப் பெற்ற தலைவன் “பாணனின் இசையைக் காட்டிலும் இனிய பண்புடையவன் என்று ஒருத்தியும் திருமண நாளைவிட இனியவன்” என்று பிறிதொருத்தியும் கூறுவதிலிருந்து இதனை அறியலாம்.

திருமணநாள் ஒரு பெண்ணுக்கு மிகப் பெரிய இனிமையைத் தருவதாகப் பதிவு செய்யப்பட்ட பாடல்களால் பெண்களைக் குடும்ப நிறுவனத்தின் முக்கிய உறுப்பினராகக் கற்பித்த அக்காலச் சமூக அரசியலை எண்ணிப் பார்க்கலாம். இப்பாடல் சங்க காலப் பெண்ணின் எதிர்பார்ப்பாக ஆணைச் சார்ந்த குடும்ப வாழ்வை நன்கு விளக்குகின்றது. இம்மாதிரியான ஆணை முன்னிறுத்திய கற்பிதங்கள் இயல்பாகவே பெண்ணைப் பின்னுக்குத் தள்ளின எனலாம். அக்காலச் சமூகத்தில் தலைவன் துணையின்றி தனியாளாக ஒரு பெண் தனது காமவேட்கையை "ஆற்றியிருத்தல்" என்பது மிகவும் வேண்டப்பட்டுள்ளது. அதன் அடிப்படையிலேயே அவள் "கற்புடையவள்" என்ற மேன்மையான சமூகத் தகுதியைப் பெறுபவளாகிறாள். இங்ஙனம் நடுநிலையின்றி பெண் உடல், மனம்மீது ஒரு பக்கமாய்ச் செலுத்தப்பட்ட ஒடுக்குமுறை சமூகத்தில் வழிவழியாய்த் தொடர்ந்தது.

## தொகுப்புரை

- சங்ககாலத்தில் கணவனைப் பிரிந்த பெண்கள், தங்களின் கணவனையே நினைத்து ஏங்கிக்கொண்டிருக்கின்றனர்
- பெண் கவிஞர்கள் தலைவியை விடுத்துத் தலைவன்! கணவன் பிரிந்து செல்கிற காட்சியில் அல்லது உணர்வில் அமைக்க அகப்பாடல்களை மிகுதியாகப் படைத்திருக்கக் காணலாம்.
- ஆணின் உடல் பாலியல் வரன்முறையற்ற பல பெண்கள் துய்ப்பதற்கான இடமாக உருவாக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## நிறைவுரை

சங்கப் பாடல்களில் ஆடவனைச் சார்ந்த வாழ்க்கை பெண்ணுக்கு அமைந்ததைப் பாடல்களில் இடம்பெறும் தலைவியரின் வருத்தத்தின் மூலம் அறிய முடிகிறது. இதன்வழிச் சங்ககாலச் சமூகப் பெண்களின் ஒட்டுமொத்த மனத்துயரத்தையும் "குடும்ப அறமென்ற" வரையறையால் பெண்களுக்கு ஏற்பட்ட நெருக்கடியையும் எண்ணிப் பார்க்கலாம். இவற்றை அக்காலப் பெண்பாற்புலவர்கள் அகப்பாடல்களில் வெளிப்படுத்தியுள்ளனர்.

## சான்றெண் விளக்கக் குறிப்புகள்

1. ந. முருகேசபாண்டியன், (தொ.ஆ.,), சங்கப் பெண் கவிஞர்களின் கவிதைகள், ப.8
2. நற்றிணை ப :121
3. குறுந்தொகை ப :31
4. அகநானூறு ப :147
5. அகநானூறு பா :273
6. அகநானூறு பாடல் 149
7. குறுந்தொகை பாடல் பா :28
8. பெ.சு.மணி, சங்க கால ஔவையாரும் உலகப் பெண்பாற் புலவர்களும், ப 278
9. அகநானூறு, பா :235 மேலது, பா :294
10. குறுந்தொகை, ப :68
11. மேலது, பா :217
12. அகநானூறு பா :11
13. குறுந்தொகை : பா : 126
14. நற்றிணை பா :295
15. குறுந்தொகை பா :67
16. நற்றிணை பாடல் :187
17. குறுந்தொகை, பாடல் 157
18. மேலது, பாடல் 48